
எதிர்காலம்

# சர்வதேச சமூகத்தின் பார்வையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்




(அமெரிக்க அகதிகள் ஆணைக்குழுவினால் மார்ச் 1997–ல் வெளியிடப்பட்ட Conflict and displacement in Sri lanka என்னும் அறிக்கையில் இருந்து பெறப்பட்டது.)

தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இயங்கி வருகின்றது. நேரடியான சேவைகளை வழங்குவதுடன் 35க்கும் மேற்பட்ட சிறிய உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் இது உதவி வருகின்றது. கடந்த சில வருடங்களாக சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சேவைகளைப் பாராட்டியுள்ளதுடன் அது தாக்கமுள்ள ஈடுபாடு கொண்ட அமைப்பு என வர்ணிக்கின்றது.

கடந்த ஒன்றரை வருடங்களாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கான தேவைகள் அதிகரித்துள்ளது. 1995 – 96–ம் ஆண்டுகளில் அரச படைகளின் தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களிற்கு ஆரம்ப உதவிகளை வழங்கியமை கழகத்தின் வளத்தைப் பெருமளவு செலவழிக்க வைத்துவிட்டது. அத்தாக்கத்தில் இருந்து இன்னமும் முழுமையாகவும் விடுபடவில்லை. அவர்கள் ஏராளமான குடியிருப்புத் திட்டங்களை இடம்பெயர்ந்த மக்களுக்காக வன்னியில் உருவாக்கியுள்ள போதிலும் அம்மக்களின் முழுமையான தேவைகளைக் கழகத்தால் ஈடுசெய்ய முடியவில்லை.

புனர்வாழ்வுக் கழகத்தின் மூத்த அதிகாரி ஒருவரின் கருத்தின் படி அவர்களால் 15 அகதிமுகாம்களை மூடி அங்கிருந்த மக்களை புதிய இடங்களுக்கு இடமாற்றம் செய்ய முடிந்தது. அங்கு புனர்வாழ்வுக் கழகத்தினால் வீடுகள், நீர், சுகாதார வசதிகள் மற்றும் வருவாய் திரட்டுவதற்கான வசதிகள், கல்வி வசதிகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. புனர்வாழ்வுக் கழகமானது சர்வதேச நிறுவனங்களுடன் சேர்ந்து 5000 பொது மக்கள் பலன்பெறும் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகின்றனர்.

மேலும், 25 000 இடம்பெயர்ந்த மக்கள் பயன்பெறக் கூடிய 150 புதிய குடியேற்றத் திட்டங்களை ஸ்தாபிப்பதற்கு தாம் முயன்று வருவதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கூறியுள்ளது.

# துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத்திட்டம்

1997–ம் ஆண்டில் பாதிக்கப்பட்டு இடப்பெயர்வுகளின் சுமைகளோடு வாழும் மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய அவசர கட்டாயம் எமக்கு ஏற்பட்டது. இதனடிப்படையில் புலம்பெயர்வாழ் மக்களின் பங்களிப்பினை மையமாகக் கொண்டு 100 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத் திட்டம் வகுக்கப்பட்டது.

இத்திட்டம் மக்களின் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, விவசாயம், தொழில், புனர்வாழ்வு, பொது விடயமென ஏழு துறைகளாக வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்துடன் இணைந்ததாக 97–ம் ஆண்டை சமூக அபிவிருத்திக்கான ஆண்டாகப் பிரகடனப்படுத்தி எமது செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

இத்திட்டத்தில் புனர்வாழ்வுக் கழகத்திடம் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களால் 800க்கும் மேற்பட்ட திட்டங்கள் பிரேரிக்கப்பட்டு அவற்றுள் 200க்கும் மேற்பட்ட திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

# வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கைக் கணிப்பீடு

**அ. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம்**

| மாவட்டம் | நிரந்தர குடிமக்கள் | இடம்பெயர்ந்தோர் | மொத்தம் |
|---|---|---|---|
| கிளிநொச்சி | 28,995 | 223,782 | 252,777 |
| முல்லைத்தீவு | 89,208 | 170,541 | 259,749 |
| மன்னார் | 13,408 | 75521 | 88,929 |
| வவுனியா | 16,516 | 63,387 | 79,903 |
| **மொத்தம்** | **148,127** | **533,231** | **681,358** |

**ஆ. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம்**

| மாவட்டம் | நிரந்தர குடிமக்கள் | இடம்பெயர்ந்தோர் | மொத்தம் |
|---|---|---|---|
| மன்னார் | 25,279 | 5,035 | 30,314 |
| வவுனியா | 65,967 | 17,816 | 83,783 |
| **மொத்தம்** | **91,246** | **22,851** | **114097** |

